இயற்கையெய்தியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

அனைத்துப் பண்டங்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி.

*3808—திரு. மெ. ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அனைத்துப் பண்டங்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிக்க வேண்டும் என தமிழ்நாடு வர்த்தகர் கழகம் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள முடிவு என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1—4—1990 முதல் பலமுனை வரிக்குட்பட்ட அனைத்துப் பண்டங்களும் இனி ஒரு முனை வரிக்குட்படும் என்று கடந்த 17—3—1990 அன்று அரசு அறிவித்துள்ளது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், விவசாயிகள் வர்த்தகர்கள் போன்றவர்கள் எல்லாம் பாதிக்கப்படுவதன் மூலமாக, நாங்கள் எதிர்க்கட்சி என்கின்ற அடிப்படையிலே கேட்கின்ற கேள்விக்கு, முதலமைச்சர் அவர்கள் ஒட்டுமொத்தமாக ஒரு முனை வரியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி விட்டார்கள். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பரமக்குடியில் நிரந்தரமாக விசேட போலீஸ் பிரிவு.

*5744 டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

1990 மே 1

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நிரந்தரமாக விசேட போலீஸ் பிரிவு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் நிரந்தரமாக விசேட காவல் பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

மதுரை காமராசர் பல்கலைக் கழக அஞ்சல் வழி கல்வித்துறை நிர்வாகச் சீர்திருத்தம்

*7567 திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழி கல்வித்துறை நிர்வாகச் சீர்திருத்தம் சம்பந்தமாக திரு. பழனி வேல்ராசன் குழு அளித்துள்ள பரிந்துரைகளை அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை, காமராசர் பல்கலைக் கழகம் ஏற்கெனவே அது குறித்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால் அஞ்சல் வழிக் கல்வி சம்பந்தமாக பல்வேறு குறைபாடுகள் நடந்ததாகவும் ஏற்கெனவே புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இது சம்பந்தமாக, திரு. பழனிவேல்ராசன் குழு ஆய்வு நடத்தியதா ? அது அளித்த பரிந்துரைகள் என்ன என்பதைத் தெரிவிக்க இயலுமா எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பழனிவேல்ராசன் அவர்களுடைய தலைமையில் அமைந்த குழு, அஞ்சல் வழிக் கல்வித் துறையில் நிர்வாகச் சீர்திருத்தம் குறித்து ஆராய்ந்தது. அந்த நிர்வாக